8th December 1961]

Families of Jail Wardens (aid)

* 2199 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீசார் குடும்பங்களில் உள்ள பெண்கள் வேலை செய்து சம்பாதிப்பது போல் ஜெயில் வார்டர்களின் குடும்பங் களில் உள்ள பெண்களும் கைத்தொழில்களில் பயிற்சிபெற்று சம்பாதிக்க வசதி செய்ய உத்தேசமுண்டா ?

(இ) எப்போது, எந்தெந்த ஜில்லாக்களில் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) No Sir.

(இ) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், போலீசார் குடும்பங் களிலுள்ள சிறிய பெண்களுக்கு மாத்திரம் இது போன்ற ஒரு வசதி செய்துகொடுத்திருக்கும்போது இந்த ஜெயில் வார்டர்களின் குடும்பங்களில் இருக்கின்ற பெண்களுக்கும் இது போன்ற வசதி கள் செய்து கொடுக்க முடியாததற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பட்சபாதம் ஒன்றும் இல்லை. முடியாததும் ஒன்றும் இல்லை. போலீஸ் இலாகா வில் அதைச் சேர்ந்தவர்கள் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு செய்து வருகிறார்கள். அதற்கு என்று பெனிபிட் பண்ட் என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி ஒதுக்கி வைத்து நடத்தி வருகிறார்கள். அம்மாதிரி ஜெயில் இலாகாவிலும் ஒதுக்கி வைத்து யாராவது அக்கரை எடுத்துக்கொண்டு நடத்தி வரலாம். அப்படி யாராவது அக்கரை எடுத்துக்கொண்டால் அவருக்கு உதவி அளிக்க சர்க்கார் முன் வரும்.

Panchayat Presidents (Election)

* 2200 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

போட்டியில்லாமல் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் பஞ்சா யத்து யூனியன்களுக்கு என்னென்ன விதமான சலுகைகள் காட்டப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : There are at present no proposals under consideration of the Government in this regard.

Sri N. R. THIAGARAJAN : போட்டியில்லாமல் செயல்படும் பஞ்சாயத்துக்களுக்கு சர்க்கார் சலுகை காட்டும் என பத்திரிகை களில் செய்தி வந்ததே, அதைப்போல் அசெம்பிளி தேர்தலிலும் போட்டியில்லாத தொகுதிகளுக்கு சலுகை காட்டப்படுமா ? என் தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் போட்டியிட மாட்டேன் என்று ஒருவர் கூறுகிறாரே அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமா ?